# தேர்வுக் களம் 3



**கீழ்க்காணும் கேள்விகளுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. படம் 1, ஒரு விலங்கைக் காட்டுகிறது. இந்த விலங்கு எவ்வாறு தன் இனவகை நீடுநிலவை உறுதி செய்கிறது?



படம் 1

A. முட்டைகளை அடைகாத்தல்
B. அதிகமான முட்டைகள் இடுதல்
C. வழவழப்பான முட்டை ஓடுகளைக் கொண்டிருத்தல்
D. முட்டைகளை அடைகாத்தல், குஞ்சுகளுக்கு உணவு ஊட்டுதல்

2. பின்வரும் விலங்குகளுள் எவை கடுமையான வெப்பத்திலிருந்து தற்காத்துக் கொள்ள சேற்றில் புரளக்கூடும்?


i கரடி
ii எருமை
iii காண்டாமிருகம்
iv ஆடு


A. i, ii   B. ii, iii   C. iii, iv   D. ii, iii, iv


3. பின்வரும் விலங்குகளுள் எது தன் முட்டைகளை மறைத்து வைக்கும்?


A. கரப்பான் பூச்சி   B. வெட்டுக்கிளி
C. தவளை   D. கோழி

4. கீழ்க்காணும் விலங்குகளுள் எது இடம் பெயர்தல் மூலம் குளிர்காலத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது?

A.


B.



C.


D.




LIVEWORKSHEETS

5. எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள பல்லி மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன?



A. துர்நாற்றத்தை வெளியாக்குதல்
B. நிறத்தை மாற்றிக் கொள்ளுதல்
C. போலிக் கண்களைக் கொண்டிருத்தல்
D. வாலைத் துண்டித்துக் கொள்ளுதல்

6. மரவட்டையின் நடவடிக்கையைப் போலவே செயல்பட்டுத் தன்னை எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் விலங்கு எது?

A. உடும்பு
B. ஓணான்
C. அழுங்கு
D. கணவாய்

7. மிகக் குளிர்ந்த பகுதியில் வாழும் விலங்குகள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றன?

i தடிப்பான கொழுப்பு அடுக்குகள் மூலம்.
ii திமிலில் கொழுப்பு வடிவில் தேவையானதைச் சேர்த்து வைப்பதன் மூலம்.
iii இடம் பெயர்ந்து செல்வதன் மூலம்.
iv அடர்த்தியான உரோமத்தின் மூலம்.

A. i, ii, iii
B. i, iii, iv
C. ii, iii, iv
D. i, ii, iii, iv

8. உணவுச் சங்கிலி என்பது என்ன?

A. வாழிடத்தில் காணப்படும் சத்துள்ள உணவுகளாகும்.
B. வாழிடத்தில் உணவின் அடிப்படையாக விளங்கும் உற்பத்தியாளராகும்.
C. வாழிடத்தில் உள்ள உயிரினங்கள் உணவைப்பெற சார்ந்திருக்கும் தொடர்பாகும்.
D. வாழிடத்தில் உள்ள பயனீட்டாளர்களாகும்.

9. உணவுச் சங்கிலியில் காணப்படும் உற்பத்தியாளர் என்பது...

A. வாழிடத்தில் தாமாக உணவைத் தயாரிக்கும் உயிரினமாகும்.
B. வாழிடத்தில் மற்றோர் உயிரினத்தை உண்ணும் உயிரினமாகும்.
C. வாழிடத்தில் மற்றோர் உயிரினத்தால் உண்ணப்படும் உயிரினமாகும்.
D. வாழிடத்தில் மிகக் குறைவாக இருக்கும் உயிரினமாகும்.

10. மலேசியாவில் சில குறிப்பிட்ட மாதங்களில் வெளிநாட்டுக் கொக்குகள் காணப்படுகின்றன. ஏன்?

A. வெப்பம் தாளாமல் இடம் பெயர்ந்ததால்.
B. குளிர் தாளாமல் இடம் பெயர்ந்ததால்.
C. இணை தேடி இடம் பெயர்ந்ததால்.
D. உணவு தேடி இடம் பெயர்ந்ததால்.



LIVEWORKSHEETS